**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ**.**சா**.34**
**Defence**
**Court**

**Name** **:ஜாகிர்உசேன்**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **01.02.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில் மறைக்காயர் பள்ளிவாசல் தெருவில் குடியிருக்கிறேன். நான் கூலக்கடை பஜார் கன்னிமாரம்மன் கோவில் தெருவில் கடை நடத்துகிறேன். சம்பவம் பற்றியும் சம்பவம் எப்போது நடந்தது என்றும் தெரியாது. வழக்கின் எதிரிகளை தெரியாது. 14.08.2007 ம் தேதி நான் காலை11.00 மணிக்கு கடையை திறக்க சென்றேன். அப்போது

சண்டை நடப்பதாகவும் கடையை திறக்கவேண்டாம் என்றும் வழியில் கூறினார்கள். சுமார் 2 அல்லது 3 நாட்கள் கடையை திறக்காமல் மூடிவிட்டேன். மற்றவர்கள் யாரும் பஜாரில் கடையை திறக்கவில்லை என்பதால் நானும் கடையை திறக்கவில்லை. இந்து சமுதாயமக்களுக்கும் இஸ்லாமியருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு இறந்துபோனதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை 2007 ம் வருடம் ஆகஸ்டு மாதம் போலீசார் விசாரித்தபோது சுதந்திர தினத்திற்கு முதல் நாள் நான் வழக்கம்போல 9.30 மணிக்கு கடையை திறந்துவிட்டேன் என்றும் 10.15 மணியளவில் என் கடையின் வடக்கு மேலமுத்தாரம்மன் கோவில் அருகில் இந்துக்களும், இஸ்லாமியர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டதாக கேள்விப்பட்டதும் நான் கடையை அடைத்துவிட்டு வீட்டிற்கு போய் விட்டேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது உண்மைக்கு மாறாக காலை 11.00 மணிக்கு தான் கடையை திறப்பேன் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இஸ்லாமியர்கள் மீதான வழக்கு இந்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்று எனக்கு தெரியாது. தற்போது இரண்டு பிரிவினக்கும் இடைய குற்றவழக்கு சம்பந்தமாக சமரசம் ஏற்பட்டு அதன் தொடர்ச்சியாக ஒருவர் மீதான மற்றவர் தொடுத்த வழக்கில் ஒருவருக்கு மற்றவர் ஆதரவாக சாட்சியம் அளிக்க ஏற்பாடு செய்து கொண்டு அதன் அடிப்படையில் என்னையும் இஸ்லாமிய சமுதாயத்தினர் கேட்டு கொண்டதன்

பேரில் நான் நடந்த சம்பவத்தை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**